# காப்பிய நோக்கில் பெரியபுராணத்தின் படைப்பாக்கக் கூறுகள்

**கலாநிதி சின்னத்தம்பி சந்திரசேகரம்,**

***தலைவர், மொழித்துறை,***
***கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.***

**ஆய்வுச் சுருக்கம்:**

தமிழர்களின் பண்பாடு உன்னத நிலைபெற்றிருந்த சோழர் ஆட்சிக் காலத்திலே 'காவியங்கள்' முதன்மையானதொரு இலக்கிய வடிவமாக விளங்கின. அதேவேளை சோழப் பேரரசில் அரச செல்வாக்கோடு பெருஞ்சிறப்புற்றிருந்த சைவத்தின் வரலாற்றை எழுதுகின்ற பணிகளும் இடம்பெற்றன. இதன் விளைவாகவே பெரியபுராணம் தோன்றியது.

பெரியபுராணம் கி.பி. 6ஆம் நூற்றாண்டு முதல் வரும் சைவத் தொண்டர் கதைமரபின் தொகுப்பாக அமைந்தது. இந்நூலை இயற்றிய சேக்கிழார் சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகையினையும் நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியையும் அடிப்படையாகக் கொண்டு தென்னகத்தில் சைவநெறி ஓங்கச் செய்த நாயன்மார் 63 பேரின் வாழ்வைப் பாடுகின்றார். அவ்வாறு பாடும்போது தனது காலக் காப்பிய மரபை உள்வாங்கியும் புதிய காப்பிய மரபுகளை ஆக்கியும் தனது நூலைப் படைத்தார். அது ஒரு தொடர்நிலைச் செய்யுளாகவே அமைகின்றது.

சேக்கிழார் காப்பியத்தின் அமைப்பைத் திட்டமிட்டே செய்துள்ளார் என்பது அதன் அமைப்பினூடாகவும் தெரிகின்றது. சேக்கிழாரின் காப்பியப் புனைவு உட்பகுப்பு நிலையில் காண்டம் எனப்படும் பிரிவாகவும் சருக்கம் எனச் சிறு பிரிவாகவும் அமைந்துள்ளது. சேக்கிழார் தனது நூலை பெருங்காப்பிய இலக்கணம் பொருந்த நாட்டுச் சிறப்பு, நகரச் சிறப்பு முதலியவற்றை அழகுற அமைத்துள்ளார். சேக்கிழார் 63 நாயன்மாரின் வரலாற்றைக் கூறினும் சுந்தரரையே தன்னிகரில்லாத் தலைமையாகக் கொண்டிருப்பது தெரிகின்றது. சுந்தரர் வரலாற்றை ஒரு தொடராகக் கூறாது நூலின் முதல், இடை, கடை என்ற மூன்று பகுதிகளிலும் வைத்தும் சுந்தரரால் குறிக்கப்பட்ட நாயன்மார்களின் வரலாறுகளை இடையிலே வைத்து அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாற்பொருளை விளக்கியும் மங்கலமாக காவியம் நிறைவுறுகின்றது.

காப்பியக் கருப்பொருளைப் பொறுத்தும் பெரியபுராணம் தனித்துவமானது. சேக்கிழார் தனியொருவர் வரலாற்றையே காவியமாகப் பாடும் மரபை மாற்றி தொண்டாகிய பண்பைக் காப்பியக் கருப்பொருளாக்கினார். பெரியபுராணம் காவிய வரலாற்றில் ஒரு வளர்ச்சியின் வெளிப்பாடாகும்.

அறிமுகம்

தமிழ் நாட்டு அரசியலில் பேரரசுகள் தோன்றி ஓரளவு நிலையான அமைதியான சமுதாய வாழ்க்கை சோழர் காலப்பகுதியிலே நிலவியிருந்தது. இதன் விளைவாக தமிழ் இலக்கியத்துக்கு வளம் சேர்க்கும் படைப்புகள் பல இக்காலத்தே தோன்றின. பல்லவர் காலத்தில் தலைதூக்கிய சைவம் இக்காலத்தில் அரச மதமாகி பெருஞ்சிறப்புற்றிருந்தது. சோழ மன்னர்கள் சிறந்த சிவ பக்தர்களாக இருந்து பல சமயப் பணிகளை ஆற்றினார்கள். கோயில்களில் நாயன்மார்களுக்கான வழிபாடுகள் இடம்பெற்றன. தேவாரப் பதிகங்கள் தேடித் தொகுக்கப்பட்டதோடு திருமுறைகளாகவும் வகுக்கப்பட்டன. இவ்வாறானதொரு சூழலில் சைவத்தின் வரலாற்றை, சைவ அடியார்களின் வரலாற்றை எழுதினார்கள். இதன் ஒரு வெளிப்பாடாகவே பெரியபுராணம் எழுதப்பட்டது.

ஆய்வு முறையியல்

பெரிய புராணத்தை முதல்நிலை ஆதாரமாகவும் அந்நூல் பற்றி வெளிவந்த ஆய்வு நூல்களைத் துணைநிலை ஆதாரங்களாகவும் கொண்டு பகுப்பாய்வு முறையின் அடிப்படையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

ஆய்வு

9ஆம் நூற்றாண்டில் எழுந்த சுந்தரரின் திருத்தொண்டத் தொகையில் குறிக்கப்பெற்ற நாயன்மார்களைப் பற்றிய பெருநூலொன்றை எழுதக் கருதி திருத்தொண்டத் தொகையை முதல் நூலாகவும் நம்பியாண்டார் நம்பி எழுதிய (11 ஆம் நூற்றாண்டு) திருத்தொண்டர் அந்தாதியை வழிநூலாகவும் கொண்டு 12 ஆம் நூற்றாண்டில் திருத்தொண்டர் புராணம் என்ற காப்பியத்தை சேக்கிழார் எழுதினார். சுந்தரர் திருத்தொண்டத் தொகையில் 11 பாடல்களில் மிகச் சுருக்கமாகக் குறிப்பிட்ட தொண்டர் வரலாறுகளை விரித்து ஒரு பேரிலக்கியமாக சேக்கிழார் பாடியபோது குறிப்பாக சோழர்கால முதன்மை இலக்கிய வடிவமாகிய காவியங்களின் தாக்கத்துக்குப் பெரிதும் உட்பட்டு அதனை எழுதியிருப்பது தெரிகின்றது. ஆயினும் அவர் தன் நூலுக்கு காவியம் என்று பெயரிடவில்லை. காரணம் அக்கால காவிய இலக்கண வரம்புகள் தனது சமய வரலாற்றுப் பேரிலக்கியத்தை எழுதுவதற்குத் தடையாக இருக்கும் என்பதை அவர்

உணர்ந்திருக்க வேண்டும். எவ்வாறாயினும் சூழல் தாக்கத்தினூடாக காவியக் கூறுகள் பலவற்றை அவர் உள்வாங்கியும் சிலவிடயங்களைப் பொறுத்து புதிய மரபுகளைத் தோற்றுவித்தும் தனது இலக்கியத்தைப் பாடினார். 'புராணம் என்னும் பெயரால் தமிழிலே தோன்றிய இலக்கியங்களுள் காப்பியம் என்று கருதத்தக்க சிறப்புடையது பெரியபுராணம் மட்டுந்தான்' என்று ஆய்வாளர் கூறுவது (மணவாளன்,அ.அ., 2006: 38) இவ்விடத்தில் சுட்டிக்காட்டத்தக்கது.

முக்கியமாக சேக்கிழார் பெரியபுராணத்தில் காப்பிய அமைப்பைத் திட்டமிட்டே அமைத்துள்ளமை தெரிகின்றது. அந்தவகையில் அந்நூல் காப்பிய மரபுக்கேற்ப பாயிரத்தோடு தொடங்குகின்றது. இது வாழ்த்து, திருக்கூட்டம், அவையடக்கம், நூற்பெயர் என நான்கு பகுதிகளாக அமைக்கப்பட்டுள்ளது. அடுத்து காப்பியப் புனைவு உட்பகுப்பு நிலையில் 13 சருக்கங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதல் சருக்கத்திலே சுந்தரர் திருத்தொண்டத் தொகையை அருளிச் செய்த வண்ணமே உரைப்பதாகக் கூறும் சேக்கிழார் திருத்தொண்டத் தொகையின் முதலடிகளில் வரும் சொற்களை வைத்து 11 சருக்கங்களை அமைப்பதோடு முதலாவது, இறுதிச் சருக்கங்களை முறையே திருமலைச் சருக்கம், வெள்ளானைச் சருக்கம் என்று தானே பெயரிடுகின்றார். சருக்கம், இலம்பகம் என்ற காவிய நூற் பகுப்புகள் குறித்த பகுதியின் மையக் கருத்னை அல்லது மைய நிகழ்வை அல்லது முதன்மைப் பாத்திரத்தை வைத்தே பெயரிடப்படுவதே மரபாகும். அதற்கமையவே சேக்கிழாரும் தானே அமைத்த இரு சருக்கங்களுக்கும் பெயரிட்ட போதும் ஏனைய 11 சருக்கங்களது பெயர்களையும் அத்தகைய எவ்வித தொடர்புகளும் இன்றி சுந்தரரின் 11 பாடல்களின் தொடக்கச் சொற்களை அல்லது தொடர்களை சருக்கப் பெயர்களாக அமைத்திருக்கின்றார்.

அத்தோடு சேக்கிழார் அமைத்த இரண்டு சருக்கங்களும் காப்பிய அமைப்பை உருவாக்கும் வண்ணம் திட்டமிட்டு அவரால் அமைக்கப்பட்டவையாவே தெரிகின்றது. அந்தவகையில் திருமலைச் சருக்கம் நாடு, நகர வர்ணனை கூறும் காவியப் பின்னணியை உருவாக்குவதாகவும் மூல நூலாசிரியரான சுந்தரரின் பெருமை கூறுவதாகவும் அமைந்துள்ளது. இச்சருக்கத்தின் முதலாவது பகுதியான 'திருமலைச் சிறப்பு' சிவன் உறையும் கைலாய மலையின் சிறப்பும் சுந்தரரின் பிறப்பின் மகிமையும் பேசப்படுகின்றன. சுந்தரர் சிவனருளால் அவதாரம் எடுப்பவராகவும் முனிவரும் தொழத்தக்க பெருமையுடையவராகவும் பாடப்படுகின்றார். ஆகவே காவியத் தொடக்கம் மூல நூலாசியனின் பிறப்பின் மகிமை பாடுவதாக அமைகின்றது. இது சேக்கிழார் சுந்தரர் மீது கொண்ட பக்கியினதும் நன்றிப் பெருக்கினதும் வெளிப்பாடாக அமைகின்றது. இதனை அடுத்தே காவிய தொடக்க உறுப்புக்களான திருநாட்டுச் சிறப்பு, திருநகரச் சிறப்பு

என்பன இடம்பெறுகின்றன. இவற்றில் முறையே சோழ நாட்டினதும் திருவாரூரினதும் சிறப்புக்கள் பாடப்படுகின்றன.

திருமலைச் சிறப்பின் இறுதியில் தொண்டர்கள் குலாவி உறையும் தொண்டர் தன்னை விளங்கும் சோழ நாட்டின் சிறப்பை இனிக் கூறுவோம் என்று நாட்டுச் சிறப்பில் சோழ நாட்டைப் பாட எடுத்துக் கொண்டமைக்கான காரணத்தைக் கூறுகிறார். சேக்கிழார் பாடும் 63 அடியார்களில் 31 பேர் சோழ நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அவ்வாறே நகரச் சிறப்பில் திருவாரூர் சிறப்பைப் பாடியதற்கான காரணம் பற்றி ஆய்வாளர்களிடையே கருத்து முரண்கள் உள்ளன. எவ்வாறாயினும் சுந்தரர் தீருவாரூர்த் தருக்கோயிலுக்குச் சென்றபோது தேவாசிரிய மண்டபத்தில் இருந்த சிவனடியாரைக் கண்டு அவ்கள் பெருமையை நினைந்து பாடிய பதிகமே திருத்தொண்டத் தொகை என்பார் சேக்கிழார். எனவே மூலநூலுக்கு தளமாக அமைந்ததும் தொண்டர் கூட்டம் உறைவதுமான திருவாரூரை அவர் தேர்ந்துள்ளார் எனலாம். எனவே காவிய நாயகர்களாகிய தொண்டர்களின் பிரதேச பின்புல வர்ணனைகள் இங்கு இடம்பெறுகின்றன.

இந்த நாடு, நகர வர்ணனைகளின் சிறப்பு என்னவெனில் இந்த வர்ணனைகளுக்கூடாகவும் அவர் தெய்வீகச் சூழலையும் பக்தி உணர்வையும் கொண்டு வருவதாகும். முக்கியமாக இயற்கை வர்ணனைகளுக்கூடாக இறையுணர்வைக் கொண்டுவருகின்றார். நாட்டுச் சிறப்பில் காவிரி ஆற்றைச் சிவ அடியார் நிலையில் வைத்துப் பார்க்கும் பாடலும் நகரச்சிறப்பில் கிளி, நாகணவாய் பறவைகளின் இன்னோசையை இறை உணர்வோடு இணைத்துக் காணும் பாடலும் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்கள்.

நாடு, நகர வர்ணனையை அடுத்து 'திருக்கூட்டச் சிறப்பு' என்ற பகுதியை அமைக்கின்றார். இங்கு தன் காவியத்தில் பாடவுள்ள காவியத் தலைவர்களான அடியார் கூட்டத்துக்கு பொது இலக்கணம் கூறி அறிமுகம் செய்கிறார். இப்பகுதி காப்பியம் தொடங்குவதற்கு முன்னர் அக்காப்பியத்தின் நுழைவாயிலாய், முகவுரையார், பாயிரமாய் அமைந்துள்ளது என்பர் ( ஞானசம்பந்தன்,அ.ச., 1987:469).

திருக்கூட்டச் சிறப்பின் இறுதியில் இத்தகைய அடியார்களை சுந்தரர் திருத்தொண்டத் தொகை பதிகத்தை அருளிச் செய்த வண்ணம் உரைக்கத் தொடங்குவதாகக் கூறுகின்றார். ஆனால் அவ்வாறு தொடங்க முன்னர் திருக்கூட்டச் சிறப்பினை அடுத்து மீண்டும் சுந்தரர் வரலாற்றைக் கூறுவதாக 'தடுத்தாட்கொண்ட புராணம்' என்ற பகுதியை அமைக்கிறார். இது தனது மூல நூலாசிரியனை முதல் தொண்டராக வைத்துப் பாடவேண்டும் என்ற விருப்பினாலும் திருத்தொண்டத் தொகை முறைவைப்பை இறுக்கமாகப் பின்பற்றியமையாலும் ஏற்பட்ட விளைவாகும்.

சேக்கிழார் திருத்தொண்டத் தொகை முறைவைப்பை இறுக்கமாகப் பின்பற்றியதன் விளைவாக சருக்கப் பிரிவுகள் காப்பியத்தின் கட்டுக்கோப்பில் சில சிக்கல்கள் ஏற்பட்டுள்ளமையை ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். குறிப்பாக, சருக்கங்களின் பாடல் எண்ணிக்கைகளிடையே பெரும் ஏற்றத்தாழ்வு காணப்படல், சுந்தரர் வரலாற்றை ஒரேயடியாகப் பாடாமல் ஏயர்கோன் வரலாற்றிலும் கழறிற்று அறிவார் வரலாற்றிலும் வெள்ளானைச் சருக்கத்திலும் இடைமிடைந்து பாடியமை என்பவற்றுக்கு இதுவே காரணம் என்பர் (ஞானசம்பந்தன்,அ.ச., 1987:407). ஆயினும் சுந்தரரின் வரலாற்றுச் சிறப்பை முதல் சருக்கத்தில் இரு பகுதிகளிலே கூறிய சேக்கிழார் அவரது இறுதிக் காலச் செயற்பாடுகளை, முக்திநிலை அடைந்ததை இறுதிச் சருக்கமாக அமைத்துப் பாடியிருப்பது காவியக் கட்டமைப்பை வலுப்படுத்துவதை நோக்காகக் கொண்டதாகவும் தெரிகின்றது. பல்வேறு அடியார்களின் வரலாறு பற்றிப் பேசும்போதும் அவர்கள் வீடுபேறு அடைந்ததாக பாடப்பட்டபோதும் வெள்ளானைச் சருக்கத்தில் சுந்தரரின் வீடுபேற்றை விரிவாகவும் வேறுபட்டவகையிலும் பேசுவதன் ஊடாக காப்பிய விதிமுறையைப் பேண முனைந்தமை தெரிகின்றது.

இவற்றுக்கும் மேலாக அற்புத விசயங்களைப் பொருளாகக் கொண்டு வியப்புணர்ச்சியைத் தூண்டுவது காவியங்களின் முக்கிய பண்பு என்ற வகையில் சுந்தரர் வரலாறு பற்றிக் கூறுமிடத்து இத்தகைய அம்சங்களை அதிகம் இணைத்துச் செல்வதையும் காண முடிகின்றது.

நம்பியாண்டார் திருத்தொண்டத் தொகையை விரித்துப் பாடியபோது சுந்தரர் வரலாற்றை இடையிடையே வரும் பல பாட்டாகப் பாடியதும் சேக்கிழார் சுந்தரர் வரலாற்றை இடையிடையே வைத்துப் பாடத் துணையாக இருந்திருக்கலாம். தடுத்தாட்கொண்ட புராண இறுதிப்பகுதியில் சிவன் அடியெடுத்துக் கொடுக்க சுந்தரர் திருத்தொண்டத் தொகை பாடியதைக் கூறி மீண்டும் அவர் மொழிந்த தமிழ் முறையின் வரிசைப்படி அடியார் செய்த தொண்டினைப் போற்றி உரைக்கிறேன் என்று முடிக்கின்றார். எனவே முதலாவது சருக்கம் காவியப் பின்னணி என்ற வகையிலேயே அமைகின்றது எனலாம்.

அடுத்த சருக்கமாகிய தில்லைவாழ் அந்தணர் சருக்கத்தில் தில்லைவாழ் அந்தணர் புராணத்திலிருந்து காவியம் தொடங்குகின்றது எனலாம். பல அடியார்களதும் வரலாறுகள் காவிய நடையில் கதை கூறும் போக்கிற்கு அமையப் பாடப்படுகின்றன. பிறப்பு முதல் முக்தி வரையாக பல அடியார்களின் முழு வாழ்வை கொண்டுவர அவர் முனைந்திருக்கின்றார். இதிலும் முக்கியமாக காவிய நடைக்கமைவாக பல அடியார்கள் பிறந்து வாழ்ந்த ஊரை அழகாக வர்ணித்துச் செல்வது இந்தக் காவிய ஆக்கத்திலே முக்கிய கூறாகும். 'தாம் பாட எடுத்துக்கொண்ட அடியாரது வாழ்க்கைச் சூழலை தத்ரூபமாகப் படம்பிடிப்பது சேக்கிழாரது இலக்கியச் சிறப்பு இயல்புகளில் ஒன்று என்பார் கைலாசபதி (1996: 260). இந்தப் பின்னணி

வர்ணிப்பினூடாக அந்தப் பிரதேசத்தினதும் அந்த மக்கள் குழுமத்தினதும் மத, சமூக, பண்பாட்டு மற்றும் புவியியல் பின்னணிகளை அழகாகக் கொண்டுவருகின்றார்.

கண்ணப்ப நாயனார் உடுப்பூர் சேரியிலே வேடர் குலத்திலே பிறந்தவர். சேக்கிழார் கண்ணப்பர் பிறந்து வளர்ந்த வரலாற்றைக் கூறுமுன் மலைகளும் நதிகளும் சோலைகளும் சூழ்ந்த உடுப்பூர் சேரியின் இயற்கைச் சூழமைவைக் கொண்டு வருகிறார். தொடர்ந்து பின்வருமாறு பாடுகிறார்:

குன்றவர் அதனில் வாழ்வார் கொடுஞ்செவி ஞமலியார்த்த
வன்றிரள் விளவின் கோட்டு வார்வலை மருங்கு தூங்கப்
பன்றியும் புலியும் எண்கும் கடமையும் மானின் பார்வை
அன்றியும் பாறை முன்றில் ஐவனம் உணங்கும் எங்கும் - (652)

அப்பகுதியில் குன்றவர் வாழ்வர். அப்பகுதியில் எங்கும் நாய்கள் கட்டிய விளாமரத்தின் கிளைகளில் வார்களையுடைய வலைகள் தொங்குகின்றன. காட்டுப் பன்றி, புலி, கரடி, காட்டுப் பசு, மான் கூட்டங்கள் முதலியவற்றின் பார்வை விலங்குகளும் உள்ளன. பாறை அமைந்த முற்றங்களில் மலை நெல் அரிசி உலர்கின்றது' என்று உடுப்பூர் சேரியின் கருப்பொருளையும் வாழ்வையும் கொண்டு வருகிறார்.

இந்தப் பின்னணியிலேயே கண்ணப்பரின் பிறப்பையும் வளர்ப்பையும் கூறவருகின்றார். பிறப்பு, வளர்ப்பு, தொழில் முதலானவற்றைச் சித்திரிக்கும்போது வேடர்களின் சமூக பண்பாட்டு மரபுகளைச் சொல்லோவியமாகக் கொண்டுவருகிறார். குழந்தையின் பருவ வளர்ச்சிகள் தோறும் செய்யும் சடங்குகள், விழாக்கள் பற்றிய சித்திரிப்புகள் அந்த நிலத்துக்குரிய கருப்பொருளையும் பண்பாட்டுப் பகைப்புலத்தையும் உயிர்த்துடிப்புடன் கொண்டுவருகின்றார்.

அவ்வாறே தொண்டை நாட்டில் காஞ்சி நகரத்தில் ஏகாலி குலத்தில் பிறந்த திருக்குறிப்புத் தொண்டர் பற்றிப் பாடும்போது தொண்டை நாட்டின் இயற்கை வளத்தை மிக விரிவாகப் பாடுகிறார். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் சார்ந்த அந்நாட்டின் இயற்கை வளங்களின் சிறப்பைப் பாடுகின்றார். அதைத் தொடர்ந்து காஞ்சியை இயற்கை வளமும் தெய்வீகமும் நிறைந்த பூமியாகக் காட்டுகிறார். சேக்கிழார் தமிழரின் அகத்திணை மரபை உள்வாங்கி தொண்டை நாட்டினதும் காஞ்சி நகரத்தினதும் கருப்பொருளைச் சித்திரிப்பதோடு அவற்றினூடாக தெய்வீகச் சூழலையும் கொண்டுவருகிறார்.

இவ்வாறே திருநாளைப்போவார் பிறந்த ஆதனூர்ச் சேரியையும் அழகாக வர்ணிக்கின்றார். 'கண்ணப்பர் பிறந்த உடுப்பூர் சேரியாயினும், அதிபத்தர் வாழ்ந்த துளைப்பாடியாயினும் வேறு எப்பகுரியாயினும் சரி

பழைய அகத்திணை மரபை அனுசரித்து அவ்வந் நிலத்துக்குரிய கருப்பொருளை உயிர்த்துடிப்புடன் சித்திரிப்பதில் கைதேர்ந்தவர் சேக்கிழார் என்பர் (கைலாசபதி,க.,1996:261).

அடுத்து, தொடர்பற்ற பல அடியார்களின் வரலாற்றைக் கூறிச் செல்கின்றபோது இவற்றை ஒரு தொடர்நிலைச் செய்யுளாக அமைக்கவேண்டும் என்ற நோக்கில் சில உத்திகளைப் பின்பற்றுவதைக் காணலாம். தொடக்கம் முதல் இறுதிவரை சுந்தரர் வரலாற்றைப் பகுதி பகுதியாகக் கூறிச் செல்வது, ஒவ்வொரு சருக்க முடிவிலும் சுந்தரர் பற்றிய வாழ்த்து அல்லது புகழுரைப் பாடல் ஒன்றை அமைக்கும் முறையைப் பின்பற்றுவது என்பன இதில் முக்கியமானது. இதைவிட ஒவ்வொரு புராண முடிவிலும் அடுத்த பகுதிக்குச் செல்வதற்கான தொடர்புறுத்தலைச் செய்வதாக ஒரு செய்யுளையும் அமைத்துள்ளார். இவற்றினூடாக சேக்கிழார் தனது படைப்பை ஒரு தொடர்நிலைச் செய்யுள் என்பதை நிறுவ முனைகின்றார்.

பெரியபுராணம் தொண்டு, குறிக்கொள் வாழ்க்கை என்பவற்றைப் பாவிகமாகக் கொண்டது என்பர் (ஞானசம்பந்தன்,அ.ச., 1987:220). சேக்கிழார் தொண்டையும் அன்பையும் முதன்மை இலக்கணமாகக் கொண்டு அடியார் வரலாற்றைப் பாடுகின்றார். இந்த இரண்டும் இறை சார்ந்ததாகவும் உயிர்கள் சார்ந்ததாகவும் காட்டப்படுகின்றன. இத்தொண்டிலே விருந்தோம்பலையும் கொடையையும் முக்கிய செயற்பாடுகளாகக் காட்டுகின்றார். பிறருக்குத் தொண்டு செய்வதையும் பிறர் துயர் துடைப்பதையும் தலையாய கடமையாகக் கொண்ட சிவ அடியார்களின் மனிதாயுதப் பண்பு பல அடியார்களின் வரலாறுகள் மூலம் காட்டப்படுகின்றது. மக்கள் தொண்டு செய்த பல அடியார்கள் அந்தத் தொண்டக்காகவே பொருளீட்டினார்கள். அமர்நீதி நாயனார் வணிகத்தால் பெரும் பொருள் தேடி சிவனடியாருக்குப் பணிசெய்து மகிழ்ந்தார். முன்னைய காவியங்களில் சிற்றின்பம் விதந்தோதப்பட அது இங்கு இறை அனுபவத்தினூடாகவும், தொண்டினூடாகவும் கிடைக்கும் இன்பமாக மாறுகின்றது. பல அடியார்களினதும் வாழ்க்கை வரலாற்றின் இறுதி அவர்கள் இறைவனுடன் கலப்பதாக – முத்திநிலை அடைவதாக முடிகின்றது. இதன் உச்சமாகவும் காவிய முடிவாகவும் வெள்ளானைச் சருக்கத்தில் சுந்தரரின் வீடுபேறு பற்றிய விபரிப்பு அமைகின்றது.

ஆகவே அடியார் வரலாறுகளை அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாற்பொருள் அமைப்புக்கு அமையப் பாடுவதிலே சேக்கிழார் கவனம் செலுத்தியுள்ளமை தெளிவாகின்றது.

முடிவுரை

பெரியபுராணம் தமிழ்க் காவிய வரலாற்றில் ஒரு வளர்ச்சியின் வெளிப்பாடாக அமைகிறது. சேக்கிழார் வடமொழிக் காவிய இலக்கண வரம்புகளோடு புதிய மரபுகளையும் உள்வாங்கிக்கொண்டு நாயன்மார்களின் வரலாற்றை ஒரு தொடர்நிலைச் செய்யுளாக உருவாக்க முனைகின்றார்

உசாத்துணைகள்:

[1] இராசமாணிக்கனார், மா., 2002, பெரியபுராண ஆராய்ச்சி, சென்னை: அலமு பதிப்பகம்.

[2] கைலாசபதி,க., 1996, அடியும் முடியும், பூபாலசிங்கம் புத்தக சாலை, கொழும்பு.

[3] ஞானசம்பந்தன், அ. ச., 1987, பெரியபுராணம் - ஓர் ஆய்வு, காஞ்சிபுரம் தத்துவ மையம், சென்னை.

[4] தனலெச்சுமி. க., வளையாபதி காப்பியத்தில் காணலாகும் அறநெறிச் சிந்தனைகள், தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ், Volume .2, Issue 2, 2020, Tamil Nadu: Mahizhini publication

[5] ராமசுப்பிரமணியன், வ. த., 2002, பெரியபுராணம் - மூலமும் தெளிவுரையும், திருமகள் நிலையம், சென்னை.

[6] மணவாளன், அ. அ., 2006, உலகத் தமிழ் இலக்கிய வரலாறு, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை.

[7] வையாபுரிப்பிள்ளை,எஸ்., 2010, தமிழ் இலக்கிய சரிதத்தில் காவிய காலம், அலைகள் வெளியீட்டகம், சென்னை.